Tamil | தமிழ்



# Disability Advocacy Futures Program ஆனது

## NSW அரசாங்க சேவைகளில் ஈடுபட உங்களுக்கு ஆதரவளிக்கிறது

PEOPLE WITH DISABILITY AUSTRALIA

## Disability Advocacy Futures Program 'இயலாதோரை ஆதரித்துப் பேசும் எதிர்காலத் திட்டங்கள்' என்றால் என்ன?

நி.ச.வே. அரசாங்க நிதியுதவியுடனான சேவைகளை அணுகவும், அதில் ஈடுபாடுகொள்ளவதற்கும் இயலாமையுடன் கூடிய மக்களுக்கு உதவுவதற்கான இந்தத் திட்டம் நி.ச.வே. அரசாங்கத்தால் நிதியுதவியளிக்கப்படுகிறது.

நீங்கள் அணுகுவதற்கு, உங்களுக்கு நாம் உதவக்கூடிய சேவைகள் மற்றும் ஆதரவுகளுக்கான சில உதாரணங்கள் ஆவன:

- குடியிருப்பு
- கல்வி
- சுகாதாரம்
- போக்குவரத்து
- குழந்தைப் பாதுகாப்பு
- நீதி
- கலாசார நிகழ்வுகள்
- நம்பிக்கைப்பொறுப்பு மற்றும் சட்டரீதியான பாதுகாவலர்.

உங்கள் கருத்துகளைப் பலமாக ஒலிக்கச்செய்தல், உங்களின் ஆர்வங்களைப் பிரதிநிதித்துவம் செய்தல், அத்துடன் உங்களின் உரிமைகளை நிலை நாட்டுதல் போன்றவற்றில் நாம் கவனம் செலுத்துவோம்.

## எமது சேவைகள் இலவசமானவை!




## இந்த சேவையை யார் பயன்படுத்தலாம்?

சிட்னி, தென் கிழக்கு சிட்னி மற்றும் தென் மேற்கு சிட்னியில் வசிக்கும் உளவியல் இயலாமை உட்பட, இயலாமையுடனான எந்தவொரு நபரும் Disability Advocacy Futures Program-ஐ அணுகலாம்.

இயலாமையுடன் கூடிய ஒருவருக்கு உதவுவதற்கு, குடும்ப உறுப்பினர்கள், பராமரிப்பாளர்கள், இயலாதோர் பணியாட்கள் மற்றும் ஏனையோரும் எங்களைக் கேட்கலாம்.

National Disability Insurance Scheme (NDIS) "தேசிய இயலாமை காப்பீட்டுத் திட்டம்'-ஐப் ((National Disability Insurance Scheme ((NDIS)) பெறுபவர்களாக இருக்கவேண்டுமெனக் கேட்கப்படவில்லை.

## எங்களைப் பற்றி

People with Disability Australia (PWDA) என்பது, தேசிய இயலாமை உரிமைகள், ஆதரித்துப் பேசுதல் மற்றும் இயலாமையுடனான மக்களுக்காக, அவர்களால் நடாத்தப்படும் பிரதி நிதித்துவ அமைப்பாகும்.

## தனியொருவரை ஆதரித்துப் பேசுவது என்றால் என்ன?

உங்களின் கவலைகளை எடுத்துக்கூற, தகவல்களைப் பெற்றுக்கொடுக்க, தெரிவுகளைத் தேடிப்பார்க்க மற்றும் உங்களின் சொந்த முடிவுகளை நீங்கள் மேற்கொள்ள உதவுவதற்கு நேருக்கு நேராகத் தனித்தனியாக ஆதரித்துப் பேசுதல்.

## நாம் எவ்வாறு உதவமுடியும்?

பின்வருவன போன்ற பிரச்சினைகளுடன் கூடிய இயலாதோருக்கு (எமது) ஆதரித்துப் பேசுபவர்கள் உதவமுடியும்:

- யாரோ ஒருவர் உங்களை அவமதிக்கிறார்
- உங்களுக்கு எதிராக ஒருவர் பாரபட்சமாக நடாத்துகிறார்
- சிறந்தவொரு சேவையை நீங்கள் பெறவில்லை
- உங்களுக்குத் தேவைப்படும் சேவை ஒன்றினை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியாது
- உங்களின் வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றம்



## PWDA's ஆதரித்துப் பேசும் சேவைகள் ஆவன:

- இலவசமானதும், அந்தரங்கமானதும்
- சட்டம் சாராதது
- பிரச்சினை சார்ந்தது
- குறுகிய காலம் முதல் - நடுத்தரகாலம்வரை

விடய முகாமைத்துவம், ஆதரவு ஒருங்கிணைப்பு அல்லது சட்ட ஆதரவு போன்றவற்றிலிருந்து எமது ஆதரித்துப் பேசும் சேவை (advocacy) மாறுபடுகிறது.

இவ்வாறான சேவைகளை உங்களுக்கு எம்மால் வழங்கமுடியாமல் இருக்கும் அதேவேளை, அவற்றை வழங்கக்கூடியவர்களுடன் உங்களை எம்மால் இணைத்துவிடக்கூடும்.

## உதவியைப் பெறுவது எவ்வாறு

தயவுசெய்து 1800 422 015 - இல் PWDA - ஐத் தொடர்புகொண்டு, ஆட்களைச்சேர்க்கும் அலுவலர்களில் ஒருவருடன் பேசுங்கள் அல்லது கியூ ஆர் குறியீட்டை அகலீடு (scan) செய்து **PWDA Get Help form** - ஐப் பூர்த்திசெய்யவும் அல்லது **https://qrco.de/bd4F8o** - ஐப் பார்க்கவும்.

PWDA individual advocacy services ('தனியொருவருக்கான ஆதரவு சேவைகள்') - ஐ அணுகுவதற்குப் பரிந்துரை ஒன்று தேவையில்லை.

## எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்

காலை 9 - மாலை 5 க்குமிடையில் திங்கள் முதல் வெள்ளி வரை தொலைபேசிமூலம் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

Disability Advocacy Futures Program குறித்த மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள **pwd.org.au/projects/disability-advocacy-futures-project-** ஐப் பாருங்கள்.


1800 422 015

**intake@pwd.org.au**

**pwd.org.au**



**Disability Advocacy Futures Program** பின்வருமாறு உதவியளிக்கப்படுகிறது

NSW GOVERNMENT Communities and Justice